உ

சுபம்

ஸ்ரீ ராமஜயம்.

OFFICE OF THE REGISTRAR
12 JAN 191
MADRAS
233
1·14

சாகுந்தளம்.

பி. எஸ். ஸ்கூல் பண்டிட்.

பெண் மங்களாம்பாளால்

அச்சிடப்பட்டது.

பட்டுக்கோட்டை:

ஸ்ரீ நாடியம்மன் அச்சுக்கூடம்.

1913.

இதன் விலை அணா 1 பைசா 6.

233
1·14

ஈசர்வாழும் கைலாஸ வாசலிது என்ற மெட்டு.

ஈசன் அயன் மால் இந்திரதேவர்கள் கூடி மனம் நாடி பேதை கவியதற்காதாரமா யுதவிபோத ஸாறந்தன்னை யூட்டி லீலை நாட்டி.

ஐங்கறத்தோனின் அற்புத திருவடி பணிந்து மனம் துணிந்தேன் சொற்ப பிழைகளகற்றி நற்பதம் தன்னை ஈந்து பொற்பத மலற்தன்னில்ச் சேரும் கண்பாரும்.

வாஸவாதியோர் பூஜித்து போற்றிடும் குருவேஸ்வர தருவே மங்கை சகுந்தலை மன்னன் துஷ்யந்தனுடன் மகிழும் சரிதைதனை பாட கிருபை நாட பாரிலுள்ளோர் புகழும் பரம ஞறருளிய பாலா வடிவேலா பாலைகிரிகுஜாம்பாள் பாசமகற்றி யோன் ப்ரகாசவடிவுடனே பாராய் கலிதீராய்.

2வது பாட்டு ஸரஸ்வதிஸ்துதி முற்றிப்பெற்றின
என்ற வர்ணமெட்டு.

தேவியே ஸ்ரீ பாரதியேயுன்னை மேவியே யான் கூவியே வாடியே மனம் நாடியே பதம் பாடியே கவி சூடவே.

மெத்தவே மதிசுற்றுதே நினக்குற்றதோர் மொழியற்ற தோ கற்றிலாள்க் கருவுற்றேணுதெனக் கருத்தோ மனம் வெறுத்தோ.

சிந்துவாம் பவபெந்தமகற்றும் மங்கையே வரநங்கையே பாலை என்றதி சிலமாயுந்தன் லீலையாய்ப் பரிபாலிப்பாய்.

கற்பகம் இரு பொற்பதம் அதி அற்புதமென அரியாபாலை கிரி குஜாம்பாளை உந்தன் லீலையாய் பரிபாலிப்பாய்

3வது பாட்டு கதையின் வறலார்.

தாமரையிலுதித்த கோமளவல்லி என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

கௌசிகர் தவத்தா லீன்ற காதலியாள் சகுந்தலே கோதில்லாமல் விளங்கினுள் வனிதையவள் தீதில்லாமல் விளங்கினுள்.

சரணம்.

1. பண்ணும் தவமழித்து விண்ணோ ரேவல்முடித்து பெண்ணை தனித்து வானடைந்தாள் ஸுரஸுந்தரி.

2. சுற்றிக் கிளிகளன்னம் தோகை மயில் பரவை பற்றி பாவித்து பால லீலைக்கிசைந்த கண்ணுள்.

3. அணுவுக் கணுவதாகி அகிலமனைதுமாகி பாலேகிரி குஜாம்பாளே கார்க்கும் பரனருளால்..

4வது பாட்டு.

மைந்தனே கேளாய் என்ற வர்ண மெட்டு

கண்ணிகள்,

மாமுனிவந்தார் கண்வ மாமுனிவந்தார் மாலினி தன்னில் மகிழ்ந்து நீருட. (மா)

வேத பொருள் தன்னை கண்டோம் இனி வேறெதுவும் நமக்குண்டோ யாழ்வினை ஒழித்திட்டோ மென்க பறவைகள். (மா)

மேன்னை யீந்திட்ட கண்ணுள் அரச மாதவத்தோருட பெண்ணுள் என்று சகுந்தங்கள் இன்பமாய்க்கூறிட (மா)

பாவயைக் கையினில் கொண்டுஇனி பாலிப்பதே கடனென்க காலத்திலுல் வரும் கோலமிதோ வென்று. (மா)

பண்ணிய தவமிதுவோ வென்றூர் காதிமைந்தன் புண்ணிய மகிமையே வென்றூர் முன்குலமேரிய மேன்மை இதோ வென்று (மா)

சாச்வதப்பொருளை யிழந்து சிமிஷவாஸனையால் மனம் நொந்து தேவதாவலியினுல் வந்த மோசமிதுவோ வென்று (மா)

பாலகிரி குழாம்பாள் தன்னை தினம் காக்கும் பரனை மனதெண்ணி இந்தசிசுவை எடுத்தவர் ஸொந்தவனத்தினில் வந்தார். (மா)

ஆண்டு பனிரெண்டு முடிய இவள் வேண்டிய தொண்டு புரிய கந்தமூலமதை முந்தி கொணர்ந்திட. (மா)

5வது பாட்டு.

கோலேண்ணு கோலே என்ற மெட்டு.

1. வேட்டைகளாட வென்று பௌரவன் வேகமதாய் நினைந்து அந்தமாய் நகர் விட்டு விந்தையுடனே சென்று முந்திக் கானகமடைந்தான்.

2. கச்சைகள் கட்டி வீறர் கனக குண்டலமணிந்து கொண்டு இச்சையுடனே எஜமானன் அடி தொடர்ந்து உச்சிதமாய் நடந்தார்.

3. கட்டிவலைகள் வீசி பௌரவன் அட்டகாசமாயேசி விட்டிடுவேனே இனி மிருகத்திலொட்டிய தூசி என்று மருட்டி பேசி.

4. கேசரி கரடி புலி கௌரிமான் மதகரிகளுடன் நாட்டை அழிக்கும் பல காட்டு மிருகங்களை கூட்டத்துடனே ஒழித்தான்.

5. கொட்டிய ஜெயபேரி ஓசை எட்டுத்திக்கிலுமுட்ட கட்டிய பர்ண சாலைதனைக்கண்டு கிட்டி யரசன் வந்தான்.

6. முனி புங்கவரை காணு மன்னவன் சங்கையுடனே ப்ார்க்கதிங்கள் முகமுடையாள் மங்கை சகுந்தலை அங்கம் வணங்கி நின்ருள்.

6 வது பாட்டு

முத்யாலா கோலே என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

1. ஆரோ இவளாரோ என்ன பேரோ அறியேனே கானகம் தன்னில் வஸிக்கும் கன்னி இவளாரோ.

2. மங்களமுள்ள சரீர அங்கபாரத் தோடமைந்து ஓங்கியே தவக்கோலங்கள் தாங்குமிவளாரோ.

3. பக்ஷிவாகனன் தன்னுட வக்ஷஸ்தலவாஸியோ இஷ்டமாய் அயனுடன் அணைந்து மகிழ்மாதோ.

4. மாறனைமகிழ்ந்து பெற்ற மாயவனுரின் தங்கயோ அன்னவன் அமரேசன் அணைந்து மகிழ்மாதோ.

5. ரெம்பை மேனகை கிருதாவஸி என்ற மேப்ரவஸித்தியாகி அம்பரத்திலாடிடும் அணங்கு மிவள்தானே.

6. பன்னகலோகத்து மாதோ பின் எவர் கொடுத்த மாதோ மண்ணினில் வஸிக்கு மிவள் விண்ணிமொளி தானே.

7. பாலையாள் கிரி குஜாம்பாள் பாசம் விலக்கும் பரனை நேசமாய் உள்ளத்தில் கொண்டு நீய்யா ரென்றுரைத்தாள்.

7-வது பாட்டு பாசவலையற்றவரும் என்ற மெட்டு.

கண்ணிகள்.

1. கச்யப குலம்பிறந்த கன்னி என்றறியும் சிஷ்யர்களுடன் இரைகள்தேடி முனி சென்ருர்.

2. சிலாக்கியமே நல்வர வென் பாக்கியமோ வென்றாள் யோக்கியமாய் அர்க்கிய பாத்திய ஆஸனமளித்தாள்.

3. நித்தியமாய் ப்ர்ம்மத்தின் இணையடி தொழுவார் ஸத்தியமோ நீ உரைத்தாய் ஸாகஸமோ வென்றான்.

4. சற்று மிவளாராய்ந்து புத்தியில் நினைந்து கண்ணு வனார் பின்னுமொரு புண்ணியர்க்குரைத்தார்.

5. மன்னவர் குலம்பிறந்து மகதவம் புரிந்து மறயவ னென்றே புகழ்ந்த மகிமை தனை கேளும்.

6. பின்னொருக்காலுன்னித தவமழிக்க வென்று தன் னுடைய தாவியரை ஸுரபதியனுப்ப.

7. கண்டு மிந்தக்காவலனார் காமன் வசமானார் ஸோமனை ப்பழித்த முகஸுந்தரி அணைந்தாள்.

8. மந்தஹாஸமா யிருந்தவிந்தையினால் வந்த இந்த சிசுவை எறிந்து யேந்திழயாள் சென்றாள்.

9 நித்தியகடன் முடிக்க நேமத்துடன் சென்றேன் மாலினிக்கர யிலிந்தலாலனயை கண்டேன்.

10. சுற்றிய பரவைகளும் பற்றியே பணிந்து இத்தர யிலாருமில்லாள் எடுத்துச்செல்லு மென்ற.

11. பாலையாள் ஸ்ரீ குஜாம்பாள் பக்தியாய் பணியும் நித்தியரை நினைந்து மிந்த புத்திரியை அடைந்தேன்.

12. என்றியம்ப கேட்டிருக்கேன் என்சரிதை என்றாள் மன்னவன் மலற்கணையால் மாறன் வசமானான்.

8வது பாட்டு பத்தியமாயும் சொல்லலாம் பாணபுரிசா அடியாரை என்ற மெட்டு.

மாறனே மதிமுக வீறனே மன்னனிவன் சூர பத்மனை வதைத்த ஸுந்திறனே.

எவர் குலபப்ர கரசனே இந்திறனே சந்திறனே நாபி லுதித்தவனே நாறணனே.

தேவனே தேவர்க்கு நாதனே தெய்வகுல தூதனே பூதலத்தின் புண்ணியனே.

பூபனே புவியாளும் தீபனே திவ்ய குண ப்ரதாபனே முனிவரை கார்க்குமிவனே.

அதிரூபலாவண்ய ஸுந்திறனை கண்டிருண்ட கமலமுகி காதல் கொண்டு மண்டல மிரெண்டேழுள்ள கீர்த்திதன்னை விண்டுரைத்தருளுமென் ப்ருணநாதா.

9வது பாட்டு ஓடிவந்து எந்தன்மீதில் என்ற மெட்டு

பல்லவி.

அஸ்திணபுரி அரசிருப்பது மானே விஸ்தாரமாய் கேளாய்.

அனுபல்லவி.

அனங்கன் கணையாலடித் தடிபொருக்காமலே இணங் கிட வருந்துரேன் இன்பமாய் மயிலே (அஸ்தி)

சரணம்.

1. இணங்கிட முறையுண்டோ குணங்கள் நிறைந்த மன்னு மடந்தயர்க்கென்னாளும் தானுய் அரசர் குலப்பிறந்த அணங்கே நீ அரியாயோ வரிசையுடனே காந்தர்வமணம்புரிய (அஸ்தி)

2. கண்வமுநி வருவார் புண்ணியனே உனதெண்ணம் முடித்திடுவார் (தந்தை) கட்டிகரும்பே இனி சற்றிலுயிர் விடுவேன் கிட்டி என்னை தழுவி முத்தமிடுவாய் சொன்னேன் (அஸ்தி)

3. பெற்றிடும் பாலன்க்கு பட்டந்தருவேனென்றிஷ்டப்படி உரையும் (நான்) அட்டி இல்லாமலணைந்திடுமேலினி இட்டதே சட்டம் நடத்துவேன் பட்டம் நான் (அஸ்தி)

4. மருவி மனம் மகிழ்ந்து இருவர்களும் உகந்து அரசினிர்க்கழைப்பே னென்றான் (மன்னவன்) வரிசையுடனேபல தூதுகளனுப்புரேன் விடையளித்திடு இனி குடைதனை கொள்ள (அஸ்தி)

5. விடையதை கைகொண்டு படைகள்சூழ தனதிடமதில்போய் சின்றான் (மன்னவன்) கந்தமூலத்துடன் தந்தை எதிர்வரவே மங்கை மதிகலங்கி மந்தகெதியடைந்தாள் (அஸ்)

10-வது பாட்டு எஸ்ஸரிகாமெட்டு.

மாதே நின் மதிவாடியதேதோ எவர் சூதோ
போதாகியே வாருதநின் நீதோ மனவாதோ.
2. மங்கை மன சங்கையுடன் புங்கவரை பணிந்து
திங்கள்குலமன்னரவர் அங்கத்திலணைந்தார்.
3. பருவம் வீணில் பாழாகிட முறையோ அதுஸரியோ
குருமன்னவன் மருவியதும் சூரிதான்மனுநெரிதான்
4. மண்ணிலுள்ள பாக்கியங்கள் என்னுளிலும் அடைய
பெண்ணினுட வாஞ்சைகொண்டு கண்வர் ஆசிகூற
5. பாலையாள் கிரிகுஜாம்பாள் பாசமதைவிலக்கும்
ஈசன் அருள் ஓங்கிவர மங்கை ஸுதன் யீன்றாள்
6. அந்தரத்தில் அமரர்கூடி ஸ்ரீங்காரமாய்ப்பாடி
ஸந்ததமா வாழ்கவென் றுசிமலர் வீசி.

11-வது பாட்டு தாருட்டலாகவும் சொல்லலாம்.

கண்ணே என் கண்மணியே ஏஜெகதீசா
கற்பகமே நற்றவமே ஏஜெகதீசா
கண்ணுவனார் பெண்ணுடைய ஏஜெகதீசா
கலிதீர்த்த மாணிக்கமே ஏஜெகதீசா

மன்னர்குலம் பிறந்த ஏஜெகதீசா
மாசில்லா மணிதனக்கு ஏஜெகதீசா
ஜாதகற்மம் முதலாய் ஏஜெகதீசா
சடுதியில் முடித்திடவே ஏஜெகதீசா
ஆண்டுசில சென்றிடவே ஏஜெகதீசா
பூண்டிட்டான் கல்விதன்னை ஏஜெகதீசா.

12-வது பாட்டு ஸாரஸஸமுக என்ற மெட்டு.

பல்லவி.

ராஜன் வாரு மோசமேதோ கூசியே முனி
ஏசுவாரென் றஞ்சியோதுரை ராஜ

சரணம்.

1. மணிமுடி தரித்திடும் மன்னவர் வணங்கவே
மானிலமாள்வதில் குறை ஏதோ துரை ராஜ
2. கானகந்தன்னில் ஸேனைகளை அனுப்பி
பாதகரால் வரும் குறை ஏதோ துரை ராஜ
3. ஈசன் என்னுட நேசன்ப்ருணவிச்
வாஸநாம் உல்லாஸமாய் துரை ராஜ
4. மங்கைமதிகலங்க புங்கவரும் அறிந்து
சங்கை இல்லாதனுப்ப தருணம் தருணம் ராஜ

13 வது பாட்டு ஈவேள நலுகு மெட்டு.

பல்லவி.

•ராஜன் மனை தனக்கேகுவாய் ருஜமன்னன்
மனைதனக் கேகுவாய்.

சரணம்.

அளியின் கூட்டத்தின் ஒளியும் சிகயுடன்
மந்தஹாஸமாய் மதிமுகந்தன்னில் செந்தாமரை

இதழ்போலேநயனமும் விந்தயாய் திலகுஸுமநாஸியும் மெத்தலாவண்ய முத்துப்பல்லுடன் பவழம் குன்றிட அதா சோபயும் சங்குகண்டத்தில் சந்த்ரஹாரமும் கனககிரிகுஜவக்ஷ ஸ்தலத்துடன் மின்னல்கொடி இடைதன்ன நாபியும் மத்த கெஜநடைபுத்திரிதனை பாலர்ஷேஸரி சீலன் ஸுதனுடன் கால மரிந்திடும் கண்வமுனியவர் பெண்ணை னேக்கிபுகன்றிட்டார் (ராஜன்)

உர்ற தந்தயை பற்றிபணிந்திவள் சற்றும் பிரிவேனே சற்த்தனே பதியே கெதி என்று விதியும் புகன்றிட மதியின் மோசமோ சதியாய் உரைத்திட்டாய் ஸரவிஜாக்ஷியே சற்றினில் (ராஜன்)

14-வது பாட்டு.

கண்ணிகள்.

துஷ்யந்தன்தேவி ஸுதனுடன் நகர் வருள் வருள் வருள் தந்தை மலரடிபணிந்து ஆசிதனைபூண்டு சிஷ்யர்கள் சிலரை சேர்த்து அழைத்து வருள் வருள் வருள்.

சாலைகளும் மலர்ச்சோலைகளும் வனஓடைகளும் தாண்டி பற்றியே தாமரை ஓடையதனை கண்டாள் கண்டாள் கண்டாள் தடாக தடத்தில் தனித்துப் பிரிந்திவள் அஸ்தினபுரியின் விஸ்தார வீதி வருள் வருள் வருள்

கற்புடையாளிவள் பொற்சிலையாளென்று போற்றி புகழ்ந்திட அஸ்தினபுரியின் விஸ்தார வீதி வருள் வருள் வருள்.

15-வது டாட்டு.

கண்ணிகள்.

சந்திரனைவென்ற ஸுந்திரமான முகத்துடயாள் இவளைபங் கயன் பாரில் படைத்த விதமேதோவென்றுரைத்தார் சிலர்கள்

வில்லோ கரும்பிந்த மெல்லியாளின் புருவமென்றுரைத் தார் சிலர்கள் சொல்லோ அமிர்தப்ரவாக பெருக்சத்தை அணை கொண்டு கட்டுமென்பார்

கண்ணுக்குள் வைத்து எமை கபாடங்கொண்டு இருக்கி பூட்டிடென்பார் சிலர்கள் எண்ணி எண்ணி இப்பெண்ணின் மகி மையை எடுத்துரைப்பார் சிலர்கள்

இவள் பண்ணினுள் பூஜைபரப்ரம்மத்துக்கென்று பார்ந் திடுவோர் சிலர்கள் அந்த புண்ணியத்தால் வந்த பெண்ணிவ ளென்று புகழ்ந்திடுவார் சிலர்கள்.

பாலகிரி குஜாம்பாள் பாசம்விலக்கிய ஈசன் அருள் நினை ந்து மன்னவன் சொலுவில் முன்னே வணங்கி மைந்தனுடன் பணிந்தாள்.

16-வது பாட்டு ஸ்ரீராமச்சந்திரனே என்ற மெட்டு.

கண்ணிகள்.

1. ஸ்ரீங்காரமாயுள்ள அங்கபாரத்துடைய
மங்கை நீ யாரென்று சொல் சொல் சொல்

2. கானகம்தன்னில்கா ந்தர்வமாயணைந்த
கௌசிக முனிவரின் பெண் பெண் பெண்.

3. மன்னன் மதிகலங்கி மண்ணில் புதுமை என்று
சின்னபாலன் இவன் யார் யார் யார்.

4. சண்ணன் உமது உருவண்ணன் திருமேனியை
திண்ணமூய் நோக்கிநீர் பார் பார் பார்.

5. மானேவிழிவடயாள் ஏனோபழிஉரைத்தாய் தானுப்
திரும்பி வழி செல் செல் செல்.

6. கட்டியணையும்போது திட்டமாய் பாலனுக்கு பட்டந்
தருவேனென்றீர் மெய் மெய் மெய்.

7. துஷ்டைஸ்திரி களுடைய ப்ரஷ்டை நடையுட யாள் இஷ்டப்படி உரைத்தாய் பொய் பொய் பொய்

8. பாலேகிரி குஜாம்பாள் பாசம்விலக்கும் ப்ரபு ஈசன் எங்கிலும் உண்டு காண் காண் காண்.

9. தீனமராயுரைத்து தானுய்புலம்பி நின்ருய் வேணத் தைகைய் கொண்டு செல் செல் செல்.

17 பாட்டு ரெங்கபலுகுனு என்ற மெட்டு

கண்ணிகள்.

1. மதிகுலம் தழைத்திடும் மன்னவரே இனிகெதி யாருண்டோ மங்கயாக்கு மணந்த கொழுண நல்லால் மரு விதிவேருண்டோ

2. கொழுண னென்றுரைத்த நாவதைவாள் கொண்டு குரைத்து விடுவே னென்ருன் மன்னவன் நழுவவிட்டாலினி நாதருண்டோ புவியில் மர்தர் தனக்கு

3. நாதரில்லே என்ற நங்கயே கேளாய் பூதலத்தினி னில் கெண்ணிய மாயுள்ள புண்ணியங்களழித்தோர் பெண் ணடைவரோ

4. புண்ணிய மழித்திட அன்னியாளல்லாள் கண்ணி ஞல் பாரும் பார்க்கவென்று உரைத்தாள் தீர்க்கமுடனே இவள் எர்க்குமோ வென்ருன்

5. இல்லறம் பொருளுடயா ளென்றறியும் ருஜவல்லபா சொல்லுறமேரிய கல்மனதாளே வெளிதள்ளென்றுரைத்தான்

18 வது பாட்டு ஞாயந்தானே என்ற மெட்டு

பல்லவி.

நீதிதானே நீர் சொல்லும் ருஜர்கள் நீதிதானே

அனுபல்லவி

பாதிமதியணியும் பரமனரியருஜ (நீதி)

சரணம்

1. பேதயாளென்று பேறட்டி காமவேதனையாலென்னை
கிட்டி அன்று சாதனையாகஉரைத்தீர் எவர் போதனையா
லெவெருத்தீர் ருஜ (நீதி)

2. அம்பலம் தன்னில் நெருத்தி பலவம்புரையாலெ
வருத்தி வாக் அம்புகொண்டுமேல் குத்தி தன்னுருவாய்
வந்தநாயனை வெருத்திட (நீதி)

3. புத்தாம் நறகத்தை அழிக்கும் மனபத்தாம் பெந்தத்
தை ஒழிக்கும் நின்வித்தால் விளைந்து தழைக்கும் அருமை
புதல்வனை பெருமை குலைத்திட (நீதி)

4. பாலைகிரி குஜாம்பாள் பணியும் முக்கால மந்தை
அரிந்தோர் அணியும் எக்காலத்திலு மழியா பொருளை
தொழுது விதியை நினைந்தழுது திரும்பிச்செல்ல (நீதி)

17 வது பாட்டு ஸ்ரீ ரெங்கனுதா என்ற மெட்டு

கண்ணிகள்.

1. ஆதிநாராயணனே அல்புதமே சின்மயமே போத
வடிவாய் விரைந்த ஈசனே புண்ணியமே ஸத்குருவே

2. மூவ்வருக்கு மூலமே முக்திப்ரதானமே அகிலமுன்
ஜாலமே ஈசனே அரியுமோ வேதமே

3. காரணன் உருக்கொண்ட கடவுளரியா தூண்டோ
அன்னையாள் செய்த வினை ஈசனே இன்னிலு மிருந்து
தோ வென்றாள்

20-வது லாவணி மெட்டு

1. மங்கிமன துருகி அங்கம்மிகப்பதறி சென்றிட வடிகள் அந்தறத்திலமரர் விந்தையுடனே சின்று மங் ஸமாயுரைத்தார்

2. குருகுலதிலகா கொற்றவர் வணங்கும் உத்தமமுக சந்த்ரு பெற்றிடும் பாலனை யுற்றமனையாளுடன் கற்றதெ அழைப்பா என்றார்

3. தானுப் வரித்திடில் தறணி இகழுமென்று நாண நேன்றாணி என்றான் கொஞ்சுங் கிளி மொழியாளஞ்சி முடி வணங்கி தஞ்சமென்றடைந்திடவே

4. பாலேகிரி குஜாம்பாள் பாசம் விலக்கிய ஈசனார் தன் கிருபயால் மாசற்ற மதிகுல நேசன் மனமகிழ்ந்து மைந்தன் அரசிலமைத்தான்

21-வது பாட்டு வந்தனம் தந்தேன் என்ற மெட்டு

பல்லவி

மணிமுடியணிந்தான் பரதன் மணிமுடியணிந்தான்

சறணம்

ராஜராஜர்கள் கூடிஸர்வ தமனன்தன்னை நாடி ஈசன் கிருபையை நேசமாய் பாடி பாலன் வேலன் சீலன் கோல (மணி)

வேத வேதியர்களோ தமாதவத்தோர்களி க்கூறதாவி சிங்காஸனமேவி ஸுதநேற புவிமுதல் ஸ்வர்னதான மீந்து புகழ் (மணி)

மானிலத்தோர்புகழேற்ற வானிலுள்ளோர் மலர்தூற்ற மங்கையாள் சகுந்தலே மனதாற்ற பாலேகிரி குஜாம்பாளுரை யேற்ற (மணி)

22-வது மங்களம்

பல்லவி

நிகிலஜெகத்ரெக்ஷகர்க்கு நித்யஜெய மங்களம்

அனுபல்லவி

ஆதிமுடிவற்ற அகண்ட ஸ்ரூபர்க்கு போதமுடயோர் பாற்றிபுகழும் பறகாசர்க்கு (நிகி)

சறணம்

அகியாபறணர்க்கு அறவிந்தா ஸநருக்கு மகிபதியாய் மண்ணிலுதித்தவர்க்கு ஐங்கரமுடையோர்க்கு அமைந்தஷண் முகருக்கு பாரதி உமைபர தேவியார்க்கு ஸசிபதிதேவர்க்கு ஸகல முனிவருக்கு முத்தொழி லேந்திய மூல புருஷருக்கு (நிகி)

சந்த்றகுலத்துதித்த இந்திறர்க்கு ரூஜரூஜ துஷ்யந்த ப்ரதனுக்கு மங்கை சகுந்தலை மறயோர் பெரியோருக்கு மகிழ்ந்து பிழையகற்றும் மதிகுணர்க்கு பாலகிரி குஜாம்பாள் பேதைமதலையுரை சிலத்துடனு கந்தோர் கேட்டோர் அரிந்தோர்கள்க்கும். (நிகி)

சுபம்.

சாகுந்தளம் ஸம்பூரணம்.